விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிலம் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை மீ 27உ வெள்ளிக்கிழமை — Colombo, December, 12, 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 28 | இதழ் 191

'திரிகோணமலையில்காணிகள்கொடுக்கப்படுமா?

கல்வி புகட்டப்படுமா?'

சீர்கேடான நிலைமையை சீர்திருத்துமாறு திரு. சிவபாலன் வேண்டுகோள்

'தோட்டங்கள் தேசியமயமானால் வேலையில்லாப் பிரச்னை தீருமா?

—தொண்டமான்

1948 ஜனுவரி 3-ம் தேதி மூன்றாவது முறையாக வரவு செலவுத் திட்டம் வாசிக்கப்படும்

திரிகோணமலையின் கல்வி நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றதென்பதை நேற்று பிரதிநிதிகள் சபையில் திரிகோணமலைப் பிரதிநிதி திரு. எஸ். சிவபாலன் அவர்கள் அம்பலப்படுத்தினார்.

"திரிகோணமலை 132 வருடங்களாக பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்தும் இன்று ஆங்கு ஒரு பீஎ; ஒரு பி எஸ்.ஸி; ஒரு அத்தவக்காத்த; ஒரு டாக்டர்; ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட் நீதிபதிதான் இருக்கின்றனர்."

"கல்வி நிலைமை மோசம்; போக்குவரத்து மகா கெட்டது; விவசாயிகள் நிலப்பசி எடுத்துவிட்டனர்; இந்நிலைமை திருந்தமா?"

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே தலைமையில் நடைபெற்றது.

தொழிற் சங்க ஆலோசகராக இருந்த திரு. டி. ஹல்ஸன் வேலையிலிருந்து ராஜினாமாச் செய்ததன் காரணம் என்னவென்றும் எப்பொழுதிலிருந்து அவருடைய ராஜினாமா ஏற்கப்பட்டதென்றும் டாக்டர் என். எம். பேரேரா தொழில் மந்திரி ஜனுப் ஜாயாவைக் கேட்டார். ஜனுப் ஜாயா பதிலளிக்கையில், அவரது அதிகார பதவி மீதுள்ள அதிருப்தியாலும் இங்குள்ள வாழ்க்கைச் செலவு அதிகமானதாலும் அவர் ராஜினாமா செய்தாரென்றும் அதோடு அவர் பிரிட்டனில் தமது மனைவியுடன் வசிப்பதற்கும் விரும்பியிருந்தாரென்றும் அவரது ராஜினாமா 1948 ஜனுவரி 25 முதல் ஏற்கப்படுமென்றும் கூறினார். இதன்பின் டாக்டர் பெரேரா தொழில் மந்திரியைப் பல கேள்விகள் கேட்டார்.

'திரிகோணமலையிலுள்ள தொழிற் காரியாலயம் மூடப்பட்டதா? ஏன் மூடப்பட்டது? எப்பொழுது மூடப்பட்டது? சாம்ராஜ்ய அதிகாரத்துக்குக் கீழ் வேலை செய்யும் தொழிலாளர் தங்கள் குறைகளை எடுத்துக்கூறக் கூடியதாக அதிகாரிகள் யாராவது இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ளனரா?- மேற் கூறிய கேள்வியை டாக்டர் என். எம். பெரேரா தொழில் மந்திரியைக் கேட்டபோது திரிகோணமலையிலுள்ள தொழிற் காரியாலயம் மூடப்படவில்லையென்றும் தொழிலாளர் தங்கள் குறைகளை அங்குள்ள தொழிற் காரியாலயத்தின் பொறுப்புள்ள இன்சார்ஜிடம் தெரிவிக்கலாமென்றும் கூறினார்.

'பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுக்குள்ளோ அன்றி வெளிநாடுகளுடனோ இலங்கை ஏதாவது வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துள்ளதா? அப்படியாயின் ஒப்பந்தங்களின் நிபந்தனைகள் என்ன? அந்த ஒப்பந்தங்கள் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? அந்த ஒப்பந்தங்களை சபையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படுமா?' என்று பிரதமரை டாக்டர் என். எம் பெரேரா கேட்டதற்கு பிரதமர் எந்த நாட்டுடனும் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லையென்று தெரிவித்தார்.

மத்துகம தொகுதியில் உள்ள இடபானு குடிசை ஆஸ்பத்திரி சம்பந்தமாக திரு. வில்மட் ஏ. பெரேரா ஸ்தல ஸ்தாபன அதிகார மந்திரியைக் கேட்டபோது மந்திரி பதிலளிக்கையில் இப்பொழுது வைத்திய அதிகாரிகள் மிகவும் குறைவாக இருப்பதால் பல வித நெருக்கடிகளும் ஏற்படுவதாகவும் விரைவில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து இக்குறைகள் நிவர்த்திக்கப்படுமென்றுங் கூறினார்.

அரசாங்க கட்சித் தலைவர் வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக கமிட்டிமுறை விவாதம் நடப்பது பற்றியும் இந்த திட்டம் 12 நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் கமிட்டி முறைப்படி சபை நடக்கும்போது சபையின் நடவடிக்கைகள் பற்றியும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதன்பின் அரசாங்க கட்சித் தலைவர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகா தொடர்ந்து பேசுகையில், கமிட்டி முறைப்படி பட்ஜெட் எடுக்கப்படுவது அடுத்த வாரம் ஆரம்பிக்குமென்றும் 1948 ஜனுவரி 8-ம் தேதியுடன் இந்த கமிட்டி முறைப்படி பட்ஜெட் எடுக்கப்படுவது முடிவடைய வேண்டுமென்றும் கமிட்டி முறையில் விவாதத்தைக் குறைத்தால் தீர்மானத்தில் கூறப்பட்டபடி நடக்க முடியுமென்றும் கூறினார். பல அரசாங்க இலாகாக்களின் நடவடிக்கைகள் பற்றியும் விவாதிக்கலாமா என்று டாக்டர் பெரேரா கேட்டபோது திரு பண்டாரநாயகா, எடுக்கப்பட வேண்டிய முறைகள் பற்றி கூறினார்.

சபாநாயகர் பேசுகையில் கமிட்டி முறைப்படி பட்ஜெட் எடுக்கப்பட்டதும் 1948 ஜனுவரி 8-ம்தேதி பட்ஜெட் மூன்றாவது தடவையாக சபையில் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்படுமென்று கூறினார். அரசாங்க கட்சித் தலைவர் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியது.

பட்ஜெட் இரண்டாவது முறையாக சபையில் வாசிக்கப்பட்டது. பட்ஜெட் விவாதம் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட போது திரு விக்டர் ரத்னபக்கா தொடர்ந்து பேசினார். காரியத் தொழில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென்றும் இலங்கையில் காரியத்தைக் கொண்டு பல பொருள்களும் தயாரிக்க தொழிற்சாலைகள் அமைக்கவேண்டுமென்றும் விவசாயத்துறையில் அபிவிருத்திசெய்வதுபற்றியும் விவசாயிகளுக்கு பசளை முதலியன விநியோகிப்பது பற்றியும் தேசம் முழுமையும் உபதபால் கந்தோர்கள் திறக்கப்பட வேண்டுமென்றும் டிஸ்டிரிக்ட் ரஸ்தாக் கமிட்டிகளின் கீழ் உள்ள ரஸதாக்களை மராமத்து இலாகாவின் கீழ் உள்ள ரஸதாக்களின் நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் ரஸ்தாமுதலியன திருத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ள பொறுப்புள்ள அதிகாரிகள் மகாநாடுகள் நடக்க வேண்டுமென்றும் போலிஸ இலாகாவுக்கு போக்கு வரத்து சாதன உதவிகள் அதிகம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

இவர் மேலும்தொடர்ந்துபேசுகையில் அவசரகாலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கச்சேரிகளை யெல்லாம் மூடிவிட்டு அவற்றின் வேலைகளை நிரந்தரமான கச்சேரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் ரப்பர் தொழில் பற்றியும் ரப்பர் தொழிலுக்கு உதவியளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

கல்வி மந்திரி திரு ஈ. நுஸ்வெல பேசுகையில் கல்வி ஒரு தேசிய சேவையென்றும் கல்வி முன்னேற்றமும், டொனமூர் அரசியல் திட்டம் வந்ததினால் சமூகசேவையும் கல்வி முன்னேற்றமும் ஏற்பட்டதென்றும் கல்வி அபிவிருத்தி முறைகள் பற்றி அனுஷ்டிக்கும் கொள்கைகள் பற்றியும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் 1931-ம் ஆண்டில் இருந்த 4119 பாடசாலைகளிலுள் 543,560 பிள்ளைகள் கல்வி கற்றனரென்றும் 1946-ம் ஆண்டில் 5929 பாடசாலைகளில் 933,000 பிள்ளைகள் கல்வி கற்றனர் என்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை செலவு அதிகரிப்பு முதலிய விபரங்களையும் கூறிவிட்டு கல்வி சம்பந்தமாக இதுவரை காலமும் அனுஷ்டிக்கப்பட்டு வரப்பட்ட கொள்கைகள் பற்றியும் திரு ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா காலததிய கல்வி முறை மாற்றம் பற்றியும் கல்வி முறையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்றும் கூறினார்.

கல்விக்காக அரசாங்கம் இன்று 9 கோடியே 60 லட்சம் செலவிடுகிறதென்றும் கல்வி தாய்ப் பாஷையிலே இருக்க வேண்டுமென்றும் மத்திய பாடசாலைகளைக் கூட்டும் நோக்கம் தமக்கில்லையென்றும் அதிக ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்றும் தேசத்தில் கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டால்தான் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமென்றும் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறினார்.

ஹக்மன பிரதிநிதி திரு. பிரேம்லால் குமாரசிரி பேசியதாவது:-

நிதி மந்திரியின் பட்ஜெட் பிரசங்கத்திலிருந்து இலங்கையின் வருமானத்தில் 71 சதவிகித வருமானமும் சமூக சேவையிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் செலவிடப்படுமென்று தெரிய வருகிறது. ஆனால் பட்ஜெட்டை ஆராய்ந்து பார்த்தபோது முற்றும் ஏமாற்றென்பது தெரிய வந்தது.

சமூக சேவை செலவுகளில் விதவைகளுக்கும் அனாதைகளுக்கும் வயதானவர்களுக்கு பண உதவிகள் செய்வது வேலையில்லாதோருக்கு உதவியளிப்பது போன்ற விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பொருளாதாரத் துறையில் இயந்திர சாதனங்கள் வாங்கும் செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. பட்ஜெட்டில் சமூக சேவை பொருளாதார அபிவிருத்தி பகுதியில் உள்ள செலவுகள் இவைதான்.

வருமானத்தில் 76 சத விகிதம்?

உத்தியோகஸ்தர்களின் சம்பளத்துக்கு இலங்கையின் வருமானத்தில் 51 சத விகிதம்- அதாவது 23 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்று பட்ஜெட் காட்டுகிறது. பொதுக் கடன் நிதி 10.2 சத விகிதம்; பாதுகாப்புக்கு 16 சத விகிதம்; சட்டம், அமைதி பாதுகாப்புக்கு 4 சத விகிதம், பொதுநிர்வாகம் 5 சத விகிதம் என வருமானம் பிரிக்கப்பட்டுள்ளது மொத்தம் 76 சத விகிதம் இந்த 76 சத விகிதமும் சமூக சேவை பொருளாதார அபிவிருத்தி முதலியனவற்றில் செலவிடப்படுவதாக சொல்ல முடியாது.

ஏழைகளுக்கு சட்ட அறிஞர் உதவி

ஏழைகளுக்கு சட்ட உதவி செய்யப்படுவதற்கு பட்ஜெட்டில் இடம் வகுக்கப்படவில்லை. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் அரசாங்கம் சம்பளம் கொடுத்து ஏழைகளுக்கு உதவியளிக்க சட்ட அறிஞர்களை வைக்க வேண்டும். தேசத்தில் ஒழுங்கும் சட்டமும் பாதுகாக்கப்பட இத்தகையநடவடிக்கை அவசியம்.

பஸ போக்கு வரத்து

பஸ் போக்கு வரத்து தேசியமயமாக்கப்பட்டால் அதனால் வருடத்தில் தேசிய வருமானத்தில் ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் அதிகமாகும்.

நிதி மந்திரி இடையிட்டு 1947-48 நிதி வருடத்திற்கு பஸ போக்கு வரத்தினால உத்தேசிக்கப்பட்டது வருமானம் 80 லட்சம் ரூபாய் என்று கூறினார். இத்தொகை வருமானவரி கட்டப்பட்ட பின்னரா அன்றி அதற்கு முன்னர் உள்ளதா என்று திரு பிரேம்லால் குமாரசிரி கேட்டார். வருமானவரி கட்டுமுன் உள்ள வருமானமென நிதி மந்திரி பதிலளித்தார்.

பேராசிரியர் எஸ். ஏ. பேக்மன் (நியமன அங்கத்தவர்) பேசுகையில் பாதுகாப்பு விஷயம் பற்றியும இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க மந்திரி சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கல்வி பற்றியும் தேசம் முழுமையும் விவசாயப் பாடசாலைகள், கைத்தொழில் பாடசாலைகள் முதலியன ஸதாபிக்கப்பட வேண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

பர்மா சுதந்திர நாடு

சுதந்திர மசோதாவுக்கு மன்னர் அங்கீகாரம்

லண்டன், டிச. 10

பர்மா சுதந்திர மசோதா இன்று மாலை 5-15 மணிக்கு மன்னரின் அங்கீகாரம் பெற்றுவிட்டதாக பிரிட்டிஷ் பாராளுமன்ற ராயல் கமிஷன் இன்று பிரகடனம் செய்தது. ஆசிய நாட்டில் புதிய சுயாட்சி நாடு பிறந்துவிட்டது.

(ராய்ட்டர்)

174 லட்சம் ரூபாய் கொழும்பு வந்தது

இரண்டு ரயில் பெட்டிகள் நிறைந்த நோட்டுகள்

கொழும்பு, டிச. 10

இன்று தலைமன்னார் ரயிலில் 174 லட்சம் ரூபாய் நோட்டுகள் கொழும்பு வந்து சேர்ந்தது. இவ்வளவும் இரண்டு ரயில் பெட்டிகளை நிரப்பியதாகவும் அவற்றை ரயில்வே பாதுகாப்பு உத்தியோகஸதர் காவல் புரிந்தபடியே கொண்டு வரப்பட்டதாகவும் தெரிகிறது

மந்திரி கொத்தலாவலை பேச்சு

கொழும்பு, டிச. 11

துறைமுகத் தச்சுத் தொழிற்சாலைக் கமிட்டியில் பேசும்போது மந்திரி கொத்தலாவலை தாம் தம் கீழுள்ள எல்லாத் தொழிற்சாலைகளிலும் முதலாளி தொழிலாளிகளிடையே அதிகரித்த தொடர்புகளை ஏற்படுத்தும் ஓர் திட்டத்தை அமுல் நடத்தப்போவதாக நேற்று முன்தினம் குறிப்பிட்டார்.

"எட்டு மணித்தியால சம்பளத்திற்கு எட்டு மணித்தியாலய வேலை என்பதுதான் தேசத்தின் சுபிட்சத்திற்கான இன்றைய கோஷமாக வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.

எகிப்தில் காலரா

பால் கட்டும்படி உத்தரவு

கொழும்பு, டிச. 10

நவம்பர் 10-ம் தேதி தொடக்கம் எகிப்திற்கு வரும் எல்லோரும் காலரா நோயைத் தடுக்க கூடிய விதமாக பால் கட்டியிருக்க வேண்டும் என்று எகிப்திய அரசாங்கம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளது.

லண்டனில் வீடின்றித் தவிப்போர்

லண்டன், டிச. 9

லண்டனில் இப்பொழுது 144000 பேர்கள் வீடின்றித் தவிக்கின்றனர். நகர சபை ஜாபிதாவில் இவர்களுக்கு வீடு தேவையென இவர்களது பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. உலகிலேயே உள்ள வீடில்லாத் திண்டாட்டத்தில் இப்பொழுது லண்டன் முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறது. உடனே குடியிருப்பு வசதிக்கு வீடுகள் கட்டி முடிக்கப்படாவிடில் இத்தனை பேர்களுக்கும் வீட்டுவசதியளிக்க 36 வருடங்களாகும்.

ஆசிய பொருளாதாரக் கமிஷன்

அடுத்த கூட்டம் இந்தியாவில்

ஷாங்கை, டிச. 9

ஐக்கிய தேச சபையின் இந்தியத் தகவல் அதிகாரியான திரு ஜே. பி. எஸ். ராஜகுரியா தெரிவிப்பதாவது:-

பிலிப்பைனில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய பொருளாதாரக் கமிஷன் திருப்திகரமாக வேலையைச் செய்து முடித்திருக்கிறது. சயாம் பிரதிநிதியை அனுமதிப்பது, இந்தோனேஷியாவை கூட்டு அங்கத்தினராகச் சேர்ப்பது முதலிய அரசியல் விஷயமாக 5 தினங்கள் பலமான விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் ஆசிய நாடுகளின் புனருத்தாரண வேலைகளுக்கு அபிவிருத்தி திட்டங்களுக்குப் அடிப்படையான கொள்கைகளை வகுப்பதில் பொருளாதாரக் கமிஷன் வெற்றிபெற்றுள்ளது. அடுத்த கூட்டம் ஏப்ரல் அல்லது மே மாதம் இந்தியாவில் நடைபெறும்போது ஆசிய பொருளாதாரக் கமிஷனுக்கு ஆசியாவில் தலைமைக் காரியாலயம் அமைப்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

[ராய்ட்டர்]

ரப்பர் விலை 10 சதம் இறங்கிவிட்டது

கொழும்பு, டிச. 10

கொழும்பிலும் காலியிலுமுள்ள ரப்பர் கமிஷனர் ஸடோர்களிலும் ஏற்றுமதி வர்த்தகர்கள் ஸடோர்களிலும் வாங்கப்படும் ரப்பரின் புதிய விலைவாசிகள் இன்று முதல் அமுலுக்கு வருகின்றன: புதிய விலைகள் பின்வருமாறு:—

நம்பர். 1, ராத்தலுக்கு 55 சதம், நிர். 2 54 சதம், நிர் 3. 52அரைச் சதம், நிர். 4 48 சதம். நிர். 5, 45 சதம்.

நேற்றிருந்த விலைகள்-நிர். 1 65 சதம் நிர். 2. 62அரைச் சதம் நிர். 3.60 சதம். நிர். 4. 56 சதம் நிர். 5. 52 சதம் ஆக வேமுதல் ரக ரப்பரில் 10 சதம் விலை இறங்கிவிட்டது. உலக மார்க்கெட்டில் 55 சதத்துக்கு மேல் விலை ஏறுதிருப்பதால் இப்புதிய விலை வாசிகளை ஏற்படுத்தும்படியாயிற்று. ஆகவே ரப்பர் உற்பத்தி செய்கிறவர்கள் உற்பத்திச் செலவைக் குறைப்பதுடன் ரப்பர் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப் பின்பற்றி ரப்பர் தொழிலில் மாறுதலான நிலைமை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதுதான். ரப்பருக்கு அரசாங்கத்தின் பண உதவி நீடித்து இருக்கும் இவ்வருடத்திற்கு அரசாங்கம் 70 லட்ச ரூபாய் செலவு செய்யும்.

ஆஸ்திரேலியாவுக்கு பிரிட்டனின் உணவு தூது

லண்டன், டிச. 9

ஆஸ்திரேலியா பிரிட்டனுக்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யும் பொருட்டு அடுத்த ஜனுவரியில் பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டியொன்று ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யும்.

இலங்கை சுதந்திர மசோதா

மன்னரின் அங்கீகாரம் பெற்றது

லண்டன், டிச. 10

இலங்கை சுதந்திர மசோதா இன்று மாலை 5-15 மணிக்கு மன்னரின் அங்கீகாரம் பெற்றுவிட்டதாக இரு சபைகளினதும் கூட்டத்தில் ராயல் கமிஷன் பிரகடனம் செய்தது. இலங்கை சுதந்திர மசோதா இன்று பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட மாஜி குடியேற்ற நாட்டு மந்திரி இம் மசோதாவை பிரபுக்கள் சபையில் மூன்றாவது தடவையாக சமர்ப்பித்தார். மசோதா மீது விவாதம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டது.

(ராய்ட்டர்)

இலங்கை மீன் பிடித் தொழில்

நிபுணரின் அறிக்கை சமர்ப்பணம்

கொழும்பு, டிச 10

குடியேற்றநாட்டுக் காரியாலய மீன்பிடித் தொழில் நிபுணர் திரு சி. எப். ஹிக்ளிங் இலங்கை மீன்பிடித் தொழில் சம்பந்தமாக சில ஆலோசனைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ளார். திரு ஹிக்ளிங் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பினால் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்காக இலங்கை வந்தவராவர்.

மாஜி கணவன்மீது மனைவியின் தாக்குதல்

கொழும்பு, டிச. 9

ஜுலியானா பொன்சேகா என்னும் பெண் தனது கணவனாக இருந்து பின் விவாகரத்தாகச்செய்யப்பட்டஎல்டொன் சைமன் என்பவரைத் தாக்கியதாகவும் அதனால் அவர் இறந்ததாகவும் நேற்று வத்தலையில் நடந்த பிரஸதாபநபரின் பிரேத விசாரணையின் போது குறிப்பிடப்பட்டது. இத்தாக்குதல் நடைபெற்றபோது உக்குபண்டாஎன்ற இன்னொருவரும் அதில் ஈடுபட்டுக் கத்தியால் தாக்கியதாகச் சொல்லப்பட்டது. இருவரும் இப்போது போலிஸாரால்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஹெந்தலையில் ஜுலியானா வீட்டிற்கு முன் சைமன் வந்து நின்று "நான் உயிருடன் இருக்க நீ உக்குபண்டாவுடன் வசிக்க இஷ்டமாய் இருப்பதேன்" என்று கேட்டாராம். உடனே இதனால் ஆத்திரமடைந்த ஜுலியானா வெளியே வந்து ஒரு தடிகொண்டு அவரைத் தாக்கினாராம். இந்தச்சமயத்தில் உக்குபண்டா வெளியில் வந்து ஒரு கத்தியால் தாக்கினாராம். இதனாலேயே சைமன் இறந்ததாகக் கூறப்பட்டது. அவர் உடம்பில் 16 காயங்கள் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆன் முலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலைக்கிரமத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, கட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 A, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்தரு கார்த்திகை மீ 27உ
வெள்ளிக்கிழமை

திரிகோணமலை பகுதியின் சீர்கேடு

பிரதிநிதிகள் சபையில் திரிகோணமலைப் பிரதிநிதியின் பேச்சு கல்நெஞ்சனையும் மனம் கசிய வைக்கும். பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்து ஒன்றரை நூற்றாண்டுகளாய் விட்டன. அவர்கள் மூட்டை முடிச்சுடன் வெளியேறும் காலமும் சமீபித்துவிட்டது என்றே சொல்லப்படுகிறது. இந்துமகா சமுத்திரத்தில் வெள்ளையர்களுக்கு ஆதிக்கத்தைக் கொடுப்பதற்கு திரிகோணமலை துறைமுகம் மிகவும் உதவியாயிருந்தது. பிரிட்டிஷ் கடற்படை முழுவதும் தங்குவதற்கு அதில் வசதியுண்டாம்! இக்காரணங்கொண்டே இலங்கைக்குப் பொறுப்பாட்சியளிப்பதாகக் கூறியும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை பிரிட்டிஷார்சேனநாயக்காவுடன் செய்துகொண்டார்கள். இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த பட்டினத்தின் நிலைமை எப்படி இருக்கின்றது? திரிகோணமலை முழுவதிலும் ஒரு பீ. ஏ., ஒரு பீ. எஸ். ஸி. ஒரு அத்தவக்காத்து, ஒரு டாக்டர், ஒரு டிஸ்டிரிகட் நீதிபதிதான் உண்டாம். ஆகவே கல்வி நிலைமை மகா மோசமதான். இலங்கை முழுவதிலும் இலவச கலாசாலைகள் அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்றன. ஆனால் அந்தப் பிரதேசமதிவ்வகையில் விதிவிலக்காம். ஆங்கிலம் படித்தவர்களோ அங்கு மிகக் குறைவு.

இனி போக்குவரத்து ரஸ்தாக்களை எடுத்துக்கொள்ளுவோம். பகிரங்க வேலைப் பகுதிக்குரிய விதிகள் யாவும் சீரழிந்த நிலைமையில்தான் காணப்படுகின்றன. சிறுறோடுகளைக் கடந்து செல்லுவதற்கு உரிய பாதைகள் யாவும் ஒரு நூற்றாண்டுக்கு முந்திய சாதனங்களாகவே காணப்படுகின்றன. அப்பகுதியிலுள்ள டிஸ்திரிக் ரோட் கொமிற்றியோ வீதிகளைச் செப்பமாக வைத்திருக்கமுடியாத நிலைமையில் திண்டாடுகிறது. அதற்குப் போதிய பண வருவாய் இல்லை.

எல்லாவற்றிலும் கேவலமாக விவசாயிகளின் நிலைமை தோற்றமளிக்கின்றது. மகாவலி கங்கை அங்கு பாய்கின்றது. கந்தளாய் கட்டுக்குளம் போதிய தண்ணீரை வைத்திருக்கின்றது. இருபதினாயிரம் ஏக்கர் நிலம் வெறுங் கட்டாந்தரையும் காடுமாய்க் கிடக்கின்றது. பத்தாயிரம் மக்கள் நிலமின்றித் தவிக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் பார்த்திருக்கின்றது.

இக் குறைகள் அத்தனையையும் மக்களின் கஷ்டத்தையும் சொல்லியுள்ளார் திரு சிவபாலன். இவற்றை நாம் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, அப்பிரதேச மக்கள் தமிழர் என்பதற்காகத்தான் இவ்விதம் கவனிக்கப்படாதிருக்கிறார்களோ என்று கேட்கவேண்டியிருக்கிறது. அன்றொருகால் திரிகோணமலை ஈழம் முழுவதற்கும் உணவு கொடுத்த நாடல்லவா? கல்வியில் மேம்பட்டவர்கள் வாழ்ந்த நாடல்லவா? பழம் பெருமை பொருந்திய திரிகோணமலை மக்களை வேடர்களாக்கவேண்டாம் என்று சேனநாயக்கா மந்திரி சபையைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இலங்கை-இந்திய பிரச்னை

சுமுகமாக முடிவடையுமாம்!

கொழும்பு, டிச. 11

இலங்கை இந்தியப் பிரச்னை இரு நாடுகளுக்கும் நற்பலனைக் கொடுக்கும்வண்ணம் சமீபத்தில் நடக்கவிருக்கும் இலங்கை-இந்தியப் பிரதமர்கள் மகாநாடு முடிவுபெறுமென்று இலங்கையிலுள்ள இந்திய ஹை கமிஷனர் கிரு வி. வி. கிரி நம்புகிறார்.

இரு நாடுகளுக்குமிடையே நிரந்தரமான ஒப்பந்தம் ஏற்படுவதற்கான பொதுஜன அபிப்பிராயத்தை இந்தியர்களும் இலங்கையர்களும் அவர்கள் இந்தியாவிலிருந்தாலும்சரி இலங்கையிலிருந்தாலும் சரி ஆக்கு பொதுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் திரு கிரி புத்திமதி கூறியிருக்கிறார்.

திரு கிரி டிசம்பர் மாதம் 16ம் தேதி இலங்கை இந்தியப் பிரதமர்கள் மகாநாட்டுப் பேச்சுக்களில் கலந்துகொள்ளுவதற்காக செல்லுவார்.

இலங்கையின் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனாநாயக்கா டிசம்பர் 26ம் தேதி இந்தியாவிற்குப் பிரயாணமாவார். திரு சேனாநாயக்காவுடன் அவருடைய நிரந்தரக் காரியதரிசி திரு கே. வைத்திய நாதன் செல்லுவார்.

திரு சேனாநாயக்கா, பனாகல் பாஜ்பாய்-சேனாநாயக்கா ஒப்பந்தம் இப்பேச்சுகளுக்கு உதவியாக இருக்குமென்று நம்புகிறாராம்.

நடக்கவிருக்கும் பேச்சுக்கள் நல்ல முடிவைக் கொடுக்குமென்றே திரு சேனாநாயக்கா கூறுகிறாராம்.

திரு சேனாநாயக்கா டிசம்பர் மாதம் 28ம் தேதி புதுடில்லியில் இலங்கை-இந்தியப் பேச்சுகளை நடத்துவார். பேச்சுகள் முடிந்ததும் ஜனவரி 8ம் தேதி இலங்கை திரும்புவார்.

நடக்கவிருக்கும் பேச்சுக்கள் இலங்கை இந்தியப் பிரச்னை சம்பந்தமாகவே இருக்குமாம். பாதுகாப்பு சம்பந்தமாக இப்போதைக்கு ஒரு பேச்சுவார்த்தையும் நடைபெறுதென்றே திரு கிரி நம்புகிறார்.

பாராளுமன்ற அங்கத்தினரின் மனு நிராகரிப்பு

கடுழியச் சிறைத்தண்டனை ஊர்ஜிதம்

32 பேர் சிறை செல்வர்

கொழும்பு டிச. 11

1946 ஏப்ரல் மாதத்தில் நடந்த நுறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்த சம்பவங்கள் சம்பந்தமாகத் தொடரப்பட்ட வழக்கில் மாத்தறைப் பகுதி பாராளுமன்ற அங்கத்தினர் திரு ஹாரி அபயகுணவர்த்தனவும், கொழும்பு முனிசிப்பல் சபை அங்கத்தினர் திரு எம். ஜி. மெண்டிசும் செய்துகொண்ட மனுக்கள் இன்று நிராகரிக்கப்பட்டுவிட்டன. இவர்களில் திரு மெண்டிஸ் மீது 9 மாத கடுழியச் சிறைத் தண்டனையும், திரு. ஹாரி அபயகுணவர்த்தனு உள்ளிட்ட வேறு 31 பேருக்கு 8 மாத கடுழியச் சிறைவாசமும் விதிக்கப்பட்டிருந்தது இதனை மாற்றும்படியாகவே அவர்கள் மனுச் செய்திருந்தனர்.

மேற் குறித்த இருவரில் திரு மெண்டிஸ் துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவராவார் திரு ஹாரி அபயகுணவர்த்தனு காரியதரிசியாகக் கடமையாற்றிவந்தவராவர். இருவரும் இலங்கைக் கமியூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் என்று அறியப்படுகிறது.

நால்வர் மகாநாடு

லண்டன், டிச. 10

இன்று நடைபெற்ற நான்கு வல்லரசுகள் அந்நிய நாட்டு மந்திரிகள் கூட்டத்தில் ஜெர்மன் பொருளாதாரதத்தைக் குறித்து பிரிட்டன் சமர்ப்பித்த அறிக்கை மீது விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

இந்தியாவின் பொருளாதாரத் திட்டம்

முதல்தர கைத்தொழில் நாடாக்க முயற்சி

பண்டித நேரு தலைமையில் காங்கிரஸ் நியமித்த கமிட்டியில் தீவிர ஆராய்ச்சி

கூர்க்க துருப்புகள் பற்றி முக்கூட்டு ஒப்பந்தம்

தென்னாப்பிரிக்க பிரதமர் திமிர் பேச்சு

புதுடில்லி, டிச. 10

இந்தியாவைச் சிறந்த கைத்தொழில் நாடாக்குவதற்காக திறமையான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நியமித்துள்ள கமிட்டிக்கு இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இக்கமிட்டி இன்று பிரதம மந்திரியின் காரியாலயத்தில் இரண்டு தடவை கூடி ஆலோசனைகள் நடத்தியது. எல்லா அங்கத்தினர்களும் வந்திருந்தனர். நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி பொதுவாகவுள்ள விஷயங்களைப் பற்றி இன்று தீவிரமாக பரிசீலனைகள் செய்யப்பட்டன. நாளையும் கமிட்டி கூடி ஆலோசனை நடத்தும்.

இன்று இந்தியாபாராளுமன்றத்தில் பிரதம மந்திரி பண்டித நேரு பின்வருமாறு தெரிவித்தார்:-

கூர்க்கதுருப்புகளை இந்தியசர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் வேலைக்கமர்த்துவதுபற்றி நேபாளம், இந்தியா, பிரிட்டன் ஆகிய மூன்று தேசங்களின் அரசாங்கங்களுக்கிடையே ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் ஏற்பட்டு அதில் மூன்றுஅரசாங்கங்களின் பிரதிநிதிகளும் கைச்சாத்திட்டுவிட்டனர். அதிலுள்ள அநேக நுட்பமான விஷயங்கள் பற்றி மேலும் சமரசப் பேச்சுகள் ஏற்பட்டபிறகு இறுதியான முடிவுகள் செய்யப்படும். இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததின்படி அமர்த்தப்படும் கூர்க்கத்துருப்புகள் இந்தியாவின் தேவைக்குப் போதுமானது.

காஷ்மீர் போர்

கம்பா கோட்டையில் இந்திய துருப்புகள் நடத்திய தாக்குதலில் 50 எதிரிகள் கொல்லப்பட்டனர். ஜாங்கருக்கு மேற்கே தோன்றிய எதிரிகள் விரட்டியடிக்கப்பட்டனர்.

சென்னையில் குதிரைப் பந்தயம் ஒழியுமா?

சென்னை, டிச. 10

சென்னை பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது உள்நாட்டு மந்திரி டாக்டர் சுப்பராயன் பின்வருமாறு தெரிவித்தார்:- குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது பற்றி இன்னும் அரசாங்கம் ஆலோசிக்கவில்லை. ஆனால் குதிரைப்பந்தய மைதான எல்லைக்குள் கூட குதிரைப் பந்தயத்தின்மீது நடைபெறும் பிரதயேக சூதாட்டங்களை ஒழிக்க ஏற்பாடு செய்யப்படும். இது சம்பந்தமாக மசோதா பொதுஜன அபிப்பிராயத்திற்காக வெளியிடப்பட்டுள்ளது. கூடிய சீக்கிரம் அது பாராளுமன்றத்தில் பிரரேபிக்கப்படும். குதிரைப் பந்தய சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை 1948 மார்ச்சு மாதத்தில் குதிரைச் சொந்தக்காரர்கள் தெரிந்து கொள்ளலாம்.

சர் சேதல்வாட் காலமானார்

பம்பாய், டிச 10

இந்தியாவின் பிரபலமான மிதவாதத் தலைவர் சர் சிமன்லால் சேதல்வாட் 83 வது வயதில் இன்றுபிற்பகல்காலமானார் சில தினங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தார். ஆனால் சாகும்வரை அன்றாட வேலைகளை வழக்கம் போல செய்து வந்தார். நாளை பிரேத அடக்கச் சடங்கு நடைபெறும்.

மாணவர் கிருஷிகர் ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, டிச. 10

மேற்கு வங்க மாகாண பாராளுமன்றத்தின் முன்பு இன்று மாணவர்களும் கிருஷிகர்களும் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். அரசாங்கத்திற்கு விசேஷ பாதுகாப்பு அதிகாரங்கள் வழங்கும் மசோதாவைக் கைவிடவேண்டுமென்று கோரி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். போலிசார் கூட்டத்தை கலைத்தபோது நால்வர் காயமடைந்தனர்.

இந்திய மாலுமி தீரத்திற்கு பிரிட்டிஷ் பரிசு

லண்டன், டிச. 11

தீப்பிடித்ததால் கைவிடப்பட்ட கப்பலில் தனியாகநின்ற வெறுங்கையுடன் தீயை அணைத்து கப்பலைக் காத்த இந்திய மாலுமியான சஹாபுதீனின் தீரத்தை மெச்சி அவருக்கு லாயிட்ஸ் ஸதாபனம் கடல் தீரர் பரிசை வழங்கியது.

நசுக்கப்படும் மக்களின் அகில உலக மகாநாடு

லண்டன், டிச. 10

ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள முன்னேற்ற இயக்கங்களின் பிரதிநிதிகளின் ஆலோசனைக் கமிட்டியொன்று லண்டனில் நிறுவப்பட்டது. அடுத்த வருட ஆரம்பத்தில் மிலான் நகரில் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் மகாநாடு நடத்த இக் கமிட்டி ஏற்பாடு செய்யும். இக் கமிட்டியில் இந்திய சோஷியலிஸ்ட் கட்சி, இந்தோ சைனு வியட்நாம் சுதந்திர இயக்கக் கட்சி, அகில அமெரிக்க லீக் கட்சி இவைகளின் பிரதிநிதிகளிருக்கிறார்கள்.

மிலான் மகாநாட்டில் சோஷியலிஸ்ட் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட ஐரோப்பிய பொருளாதார நிலைமை விடுதலை பெற்றுவரும். ஆசிய நாடுகளின் பொருளாதார நிலைமை, ஆப்பிரிக்க பொருளாதார நிலைமை இவைகளை ஐக்கியப்படுத்தும் வழிகள் ஆராயப்படும்.

இந்தியாவும் அயர்லந்தும்

டப்ளின், டிச. 10

ஐக்கிய தேச ஸதாபனத்தில் அயர்லந்து சேருவதை இந்தியா ஏன் எதிர்த்ததென்று இன்று அயர்லந்து பாராளுமன்றத்தில் கேடகப்பட்ட கேள்விக்கு பிரதம மந்திரி டி வேலரா பின்வருமாறு பதிலளித்தார்:- சபை நடவடிக்கைக்கோளாறுகளால் அவ்வித நிலைமை ஏற்பட்டது. இதுசம்பந்தமாக ஏற்பட்ட சிக்கல்களைக்குறித்து இந்திய சர்க்கார் அயர்லந்து சர்க்காருக்கு நிலைமையை விளக்கி தகவல் தெரிவித்துள்ளார்கள். ஆதலால் இதுபற்றி இந்தியாவுக்கும் அயர்லந்துக்குமுள்ள நேசபான்மைக்குப் பங்கமேற்படவில்லை.

தென்னாப்பிரிக்க பிரதமர் திமிர்

பிரிட்டோரியா, டிச. 11

நேற்று பிரதம மந்திரி ஜெனரல் ஸமட்ஸ பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இந்திய பிரச்னைபற்றி சென்ற வருடம் ஐக்கிய தேச சபை செய்த தீர்மானம் இவ்வருட நடவடிக்கையின் காரணமாக ரத்தாகிவிட்டது. ஆனால் சமரசம் பேச வழியிருக்கிறது. தென்மேற்கு ஆப்பிரிக்காவைப்பற்றி தென்னாப்பிரிக்கா ஐக்கிய தேச தர்மகர்த்தா ஒப்பந்தத்திற்கு இடம் கொடுக்கப்போவதில்லை. அது தென்னாப்பிரிக்காவின் ஒரு பகுதியாகவே இருக்கும்.

அரிசியில் ராஜாஜியின் சிலை

விழுப்புரம், டிச. 10

பல தலைவர்களின் உருவத்தை அரிசியில் செதுக்கியவரான விழுப்புரம் ஸ்ரீ எம். பி. வைத்தியநாதஆச்சாரி நாளது 10-ம் தேதி நடக்கவிருக்கும் மேல்வங்க கவர்னர் ஸ்ரீ சி. ராஜகோபாலச்சாரியின் 70 - வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவர் உருவத்தை ஒரு அரிசியில் செதுக்கி அதை சிறப்புற மண்டபத்திலமைத்து ராஜாஜிக்கு தம் காணிக்கையாக அனுப்பியுள்ளார்.

முஸ்லிம் சிறுமியைக் கடத்தியதாக வழக்கு

எதிரி ரூ 600 பிணையில் விடப்பட்டார்

கொழும்பு, டிச. 11

வழக்கறிஞர் எம். ஸி. காசிம் என்பவரின் வளர்ப்புப் பிள்ளையான சுபேதா என்னும் ஓர் 14 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்றதாக டி. எச். பியசேன என்னும் ஓர் கார் டிரைவர் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

பிரஸதாப சிறுமியும் டிரைவரும் நுவரேலியா ரயிலில் போய்க்கொண்டிருந்த போது பேராதனை ரயில்வே சந்தியில் வழக்கறிஞர் காசிம் அவர்களைக் கண்டு குருணாகலைப் போலிசாரிடம் ஒப்படைத்தார்.

எதிரி 600 ரூபாய் பிணையில் விடப்பட்டிருக்கிறார். விசாரணை டிசம்பர் 18-ம் தேதி நடைபெறும்.

கொலை புரிந்து பொருளைக் களவாடினர்

அதிகாலையில் நடைபெற்ற சம்பவம்

கொழும்பு, டிச. 11

நாவத்தகலையில் இன்று அதிகாலை 2-30 மணிக்கு பீட்டர் என்பவரின் வீட்டுக்குள் இருவர் புகுந்து அவரை ஒரு கூரிய கத்தியால் குத்திக் கொன்றுவிட்டதோடு அவரது மனைவி ஜோஸலீனை அடித்துத் துன்புறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது. அத்துடன் பணமும் துணிமணிகளும் இருந்த ஒரு பெட்டியைத் தூக்கிச் சென்றுவிட்டார்களாம். இது சம்பந்தமாகப் போலிசாருக்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் செய்யப்பட்டு வருகின்றன.

மண்வெட்டியால் தாக்கிக் கொலை

அக்குரான் முல்லையில் நடைபெற்ற சம்பவம்

கொழும்பு, டிச. 11

அக்குரான்முல்லைப் பகுதியில் எச். பி. மெனிக்கே என்பவர் ஓர் மண்வெட்டியால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக ஆர். பி. பண்டியா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் இன்று காலை 8-30 மணிக்கு நடைபெற்றது

டாக்டர் ஷாரீர் ஆஸ்திரேலிய விஜயம்

அமெரிக்க யுத்தக் கப்பலில் டச்சு-இந்தோனேஷியா சமரசப் பேச்சு

சிட்னி, டிச. 11

இந்தோனேஷியா மாஜி பிரதமர் டாக்டர் ஷாரீர் நன்னம்பிக்கை தூதுவராக இன்று ஆஸதிரேலியா வந்திருக்கிறார். இங்கு இரு வாரங்கள் தங்குவார். கான்பராநகருக்கும் விஜயம் செய்வார்.

பட்டேவியா துறைமுகத்தில் அமெரிக்க யுதத் கப்பலில் மூவர் கமிஷன் ஆதரவில் டச்சு-இந்தோனேஷியா சமரசப் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. [ராய்ட்டர்]

வல்லரசுகளுக்கு உபதேசம்

நோபல் பரிசு விழாவில் திரு. லே. பேச்சு

நியூயார்க், டிச 11

நோபல் பரிசு விழாவில் ஐக்கியதேச ஸ்தாபன காரிய தரிசி திரு. டிரிக்வி லே இன்று பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- வல்லரசுகளுக்கிடையே இருந்துவரும் தகராறுகளால், கோடிக்கணக்காக மக்களை மற்றொரு யுத்தத்திற்குப் பலிகொடுக்க முடியாது. ஐக்கியதேசங்கள் பரம்பரம் ஒத்துழைக்க முன்வரவேண்டும். ஐக்கியதேச ஸ்தாபனத்திற்கு எவ்வளவோசங்கடங்கள் நேரிட்டபோதிலும் அது இன்று பலம் பொருந்தியதாகவே இருக்கிறது. (ராய்ட்டர்)

துருக்கியில் பூமியதிர்ச்சி

அங்காரா, டிச. 10

கீழ் அனற்றோலியாவில் சில பகுதிகளில் சென்ற இரவு கடுமையான பூமியதிர்ச்சி யேற்பட்டு பல வீடுகளும் 200 வேறு கட்டிடங்களும் சேதமடைந்தன.

உயிர்ச்சேதமேற்பட்டதாகத் தகவலில்லை. பலர் பீதியினால் வெளிகளில் கூடாரம் அமைத்து அவைகளிலே தங்கினர். 800 பேர் வரையில் வீடின்றித்தவித்தனர்.

ஹசான்கேல், கறக்குலே என்னும் பிரதேசங்களில்தான் சேதமதிகம்.

இந்த அதிர்ச்சி ஸைப்பிரஸ் தீவையும் அரை நிமிடம்வரை பாதித்ததாம். ஒருசேதமுமில்லை. (ராய்ட்டர்)

பிரதம மந்திரி மீது நம்பிக்கையில்லை

பாரசீகத்தில் அரசியல் நெருக்கடி

டெஹ்ரான், டிச. 11

இன்று பாரசீக பாராளுமன்றம் பிரதம மந்திரி கவாம் சுல்தானா மீது நம்பிக்கையில் லாத் தீர்மானம் நிறைவேற்றியது. அவர்உடனேசபையை விட்டு வெளியேறிச் சென்றார். அவரது ராஜினாமா எதிர்பார்க்கப்படுகிறது. பாராளுமன்ற முறைப்படி நம்பிக்கையில்லாத தீர்மானம் நிறைவேறின் பிரதம மந்திரி அவசியம் ராஜினாமா செய்யவேண்டும் சோவியத்-பாரசீக ஆயில் ஒப்பந்தத்தகராறால் இவ்விளைவு ஏற்பட்டது.

பாரசீக வடமாகாணமான அஜர்பெய்ஜான் தலைநகரில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. மாகாண முழுவதிலும் துருப்புகள் நிறுவப்பட்டிருக்கின்றன. (ராய்ட்டர்)

இங்கிலாந்துக்கு விசேட முத்திரை

மன்னரின் வெள்ளி மண விழா

லண்டன், டிச, 10

மன்னர்பிரானும் அரசியும் திருமணம் முடித்த 25-வது வருடக் கொண்டாட்டத்தை நினைவூட்ட வருகிற ஏப்ரல் 26-ல் விசேட முத்திரைகள் வெளியாகுமென தபால்தந்தோரதிகாரி திரு பாலிங பாராளுமன்றத்தில் இன்று கூறினார். [ராய்ட்டர்]

பாலஸ்தீன ஹை கமிஷனர் எச்சரிக்கை

கலகங்களை அடக்க கடுமையான நடவடிக்கை

கெய்ரோ நகரில் அராபிய லீக் மந்திராலோசனை

ஜெருசலேம், டிச. 11

யூதர்-அராபியர் கலகங்களை ஒடுக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமென்று ஹை கமிஷனர் கன்னிங்ஹாம் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். ஆயுதமெடுத்துச் செல்கிறவர்களுக்குக் கூட மரணதண்டனை விதிக்கப்படும்என்று தெரிவித்தார்.

நேற்று மீண்டும் ஏற்பட்ட கலகத்தில் 9 யூதர்களும் 6 அராபியர்களும் ஒரு பிரிட்டிஷாரும் மாண்டனர். பிரிவினைத் தீர்மானத்திற்குப்பின் 11 தினங்களாக நடைபெறும் பாலஸதீன கலகத்தில் 4 பிரிட்டிஷாரும் 120 யூதர் அராபியர்களும் மாண்டனர்.

வட பாலஸதீனத்திலுள்ள ஏக்ரே நகரில் அராபியர்கள் உதவியால் சிறையிலிருந்த 18 அராபியக்கைதிகள் தப்பியோடிவிட்டனர். இது சம்பந்தமாக ஒரு பீரங்கியுத்தமும் நகரில் ஏற்பட்டது. ஹைபா நகரில் தீப்பற்றி எரிந்தது ஒரு யூத போலிசார் குத்திக் கொல்லப்பட்டார் தெற்கு பாலஸதீனத்தில் கெவலுட் என்னுமிடத்தில் இருயூதர்களும் ஒரு யூதப் பெண்ணும் மாண்டு கிடந்தனர் மற்றும் மூவரைக் காணவில்லை. யூதர்கள் குடியேறியுள்ள இவ்விடத்தை அராபியர் தாக்கினர். டெல் அவிவ்—ஜாபா நகரவாசிகளுக்கிடையேசமாதானம்ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது பிரிடிஷ் போலிசார் நடந்த சம்பவங்களுக்குப் பழிவாங்கும் பொருட்டு யூதர்களை இம்சிப்பதாகச் சொலலப்படுகிறது.

அராபிய லீக் கூட்டம்

கெய்ரோ, டிச. 10

இன்றிரவு கிராண்ட் முப்தியும் சவூதி அரேபியா பிரதிநிதியும் அராபியா லீக் காரியதரிசி வாசஸதலத்தில்சந்தித்து 5 மணி நேரம் ரகசியமாகப் பேசினார்கள். சவூதி அரேபிய மன்னர் புதிதாகவும் அந்நியநாட்டு மந்திரியுமான எமிர் பெய்சல் இன்றிரவு நடைபெற்ற அராபிய லீக் கூட்டத்தில் நியூயார்க்கிலிருந்து வந்ததும் பாலஸ்தீன பிரச்னை பற்றி விவாதித்தார். சிரியா பிரதம மந்திரியும்தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். பிரிவினையை எதிர்த்துப் போரிடுவதால் சர்வதேச சம்பந்தமாக எவ்வித விளைவுகள் ஏற்படுமென்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டது.

கனகம் ஆகாகான் மறுப்பு

சிரியாவிலுள்ள இஸமெய்லி முஸ்லிம் தலைவரான எமிர் சுலைமான், பாலஸதீனப் பாதுகாப்பு போருக்கு கனகம் ஆகாகான் 8 கோடி தங்கப்பவுண் கொடுக்க வாக்களித்திருக்கிறார் என்றும் ஐக்கிய தேச சபை பாலஸதீன பிரிவினைத் தீர்மானத்தை ரத்து செய்யாவிடில் பாலஸதீனம் முழுவதையும் விலைக்கு வாங்கி அராபியர்களிடம் இனாமாகக் கொடுத்துவிடுவதாகவும் தெரிவித்திருக்கிறார் என்றும் சொன்னதாக டமஸகஸ் ரேடியோ நிருபர் தெரிவித்தார்.

இது விஷயமாக பாரிஸ அருகே வசிக்கும் கனகம் ஆகாகானை டெலிபோன் மூலம் விசாரித்ததில் அவர் அதைப் பற்றி தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லிவிட்டார்.

உலக யுத்தத்தில் போர் புரிந்த சுமார் 5000 வீரர்கள் பாலஸதீனப் பாதுகாப்புப் போரில் உதவி செய்யத்தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களிலிருந்து அராபிய லீக்குக்குத் தந்திச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

சீனத் துருப்புகளை பாலஸதீனத்திற்கு அனுப்பும்படி அமெரிக்கா கேட்டதாக வெளிவந்த செய்தி உண்மையல்ல வென்றும் சீன உதவி அந்நியநாட்டு மந்திரி தெரிவித்தார். (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிப்பனையில் நடைபெற்ற கொள்ளை

என்மர் மீது வழக்கு

களுத்துறை, டிச. 11

களுத்துறைப்பகுதியில் உள்ள வெலிப்பனையில் ஹின்டன் டி அல்விஸ செனிவிரத்னஎன்பவரதுவீட்டைக்கொள்ளையிடமுயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு அசைஸ கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் ஆர். ஒ. லயனல் பெரேரா, கே. நதோரிஸ, எம். டி. பியதாஸ, ராமய்யா, யூ. எம். இஸமாயில், பி. நந்தோரிஸ, சார்ள்ஸ சிங்கோ, அந்தோனி மார்ட்டினு ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். இவர்கள் மீது அபாயகரமான காயங்கள் விளைவித்து ரூபாய் 22 968-20 களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இது சம்பந்தமாக ரிச்சார்ட் பெரேரா என்னும் ஒரு சாட்சி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு:—

இரண்டாவது எதிரி என்னை ஒரு நாள் கண்டு ஒரு லாபகரமான "வியாபாரத்தை"க் களுத்துறைப் பகுதியில் தாம் செய்யப்போவதாகக் குறிப்பிட்டு வெலிப்பனையில் ஒரு தனவந்தர் வீட்டைக் கொள்ளையிடுவது பற்றிப் பிரஸ்தாபித்தார் இத்தாக்குதலை ஒரு கடற்படை லொறியின் உதவிகொண்டு நடத்துவதென்றும் பேசப்பட்டது.

ஏப்ரல் 1-ந் தேதி நானும் இக் கோஷ்டியுடன் போவதற்கு இருந்தேன். ஆனால் எனது நண்பர் ஒருவரின் சுகயீன நிலைமையால் என்னால் போக முடியவில்லை. அதற்குப் பின்னால் ஒரு கடற்படை லொறி சில சாமான்களுடன் பிடிபட்டிருப்பதாக அறிந்தேன். இது நாம் போகத் திட்டமிட்ட அதே லொறியாக இருக்கலாம் என நான் சம்சயித்தேன்.

அதன் பின்னர் எதிரிகளில் இருவரை நான் சந்தித்த போது திட்டம் சரிவரவில்லை என்றும் லொறி கைப்பற்றப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் கூறினர்.

எனது வாயை அடைப்பதற்காக ரூபா 35 எனக்குத் தரப்பட்டது. அத்துடன் மேலும் பணம் தருவதாக வாக்களிக்கப்பட்டது.

இதை நான் ஒரு நண்பருக்குக் கூறினேன். அவரால் இது போலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் திரு செனிவிரத்ன, ஸ்ரீமதி செனிவிரத்ன சப் இன்ஸபெக்டர் ஜலீஸ ஆகியோர் சாட்சியமளித்தனர். விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, டிச. 11

லென்டி டி. சில்வா என்பவர் நவம்பர் 22-ம் தேதி அனுராதபுர ஆஸ்பத்திரியில் படுத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். இன்று அவர் மரணமானார். தாக்கியவர் யார் என்பது இதுவரை தெரியவில்லை. விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சுலோகத்தைப்பாடி மக்களை ஏமாற்ற முடியாது

இலங்கைக்கு சுதந்திரமா? அல்லது யூ.என்.பி.யின் சர்வாதிகாரமா?

மூன்றிலொருபங்கு வருவாய் நிர்வாகத்திற்குச் செலவா?

மொரட்டுவா தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவர் திரு. சோமவீர சந்திரசிரியின் "நிதாஸ" (10-12-47) என்னும் சிங்களப் பத்திரிகை எழுதுவது.

சேனாநாயக்கா கம்பெனியின் புதிய கபினெட் சபை நிறுவப்பட்டபின் வருகிறவருட புதிய வரவு செலவுத் திட்டத்தை பொக்கிஷ மந்திரி திரு ஜே. ஆர் ஜயவர்த்தனவால் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து, இதைப் பற்றிய திரு. ஜெயவர்த்தனு சிங்களத்தில் பேசுவாரென்று தேசமக்கள் முன் கூட்டியே எதிர்பார்த் திருந்தார்கள் ஏனென்றால் அவர் சுவபாஷைகளிலே அரசாங்க காரியங்களை நடத்தவேண்டுமென்று பெரிய ஊர் புரளியை உண்டாக்கிவிடடதோடு அரசாங்க சபையிலும் ஒரு பிரேரணையைக்கொண்டுவந்து கரணமும் அடித்தார். எப்படியாயினும், திரு ஜெயவர்த்தனு சொன்னபடியும், தேச மக்கள் எதிர்பார்த்தபடியும் ஒன்றும் நடைபெறவில்லை.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில், ஒரு "பாளி" சுலோகத்தையும் சேர்த்து, ஆங்கிலத்திலேயே பேசினார் திரு ஜெயவர்த்தனு. அந்த "பாளி" சுலோகம் புத்தபிரானின் அருள் வாக்காகும், அந்த சுலோகத்தின் பொருளை பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கு எடுத்துக் காட்டிய திரு. ஜெயவர்த்தனு அதன் படியே வரவு செலவுத் திட்டத்தை தயாரித்திருப்பதாகக் கூறினார். ஆனால் அந்த சுலோகத்தின் நீதியின்படிதான் வரவு செலவுத்திட்டம் தயார் செயயப்பட்டிருக்கிறதா வென்பதை படித்தறிந்த மக்களே தீர்மானிகக்கட்டும்.

திரு. ஜெயவர்த்தனுவுக்கு பாளி பாஷை தெரிந்தாலும், தெரியாவிட்டாலும், இந்த சுலோகத்தின் சரியான அர்த்தத்தையாவது தெரிந்திருப்பாரானால் உண்மையிலே அவர் புத்தபிரான் திருவாக்கை சிறிதாவது அனுசரித்து இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து இருப்பார். எனினும் அவரால் தயார் செய்யப்பட்ட வரவு செலவு திட்டம் எப்படியும் அந்த சுலோகத்தை சிறிதும் தழுவி யிருக்கவில்லை. எனவே, வரவு செலவுத் திட்டத்தோடு இந்த பாளி சுலோகத்தை சேர்த்துக்கொண்டது எதற்காகவென்றால், அவர் புத்த சுலோகத்தை பாடி தேச மக்களை ஏமாற்ற எண்ணியதாய் இருக்கக்கூடும்.

புத்தரின் தர்மோபதேசங்களால் கழனி தொகுதி மக்களை ஏமாற்றிய இந்த பௌத்த சந்நியாசியார், தேர்தல் காலத்தின்போது பௌத்தபிக்குகளுக்கு எதிராக செய்த ஆர்ப்பாட்டங்களை எவரும் மறந்துபோகவில்லை. இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட பௌத்தர்கள் இதைவிட வேறெந்த சுலோகத்தைத்தான் அலங்காரமாகப் பாடியபோதிலும் கூட ஏமாறறமடையமாட்டார்கள்.

அது போகட்டும் அந்த சுலோகத்தின்படி புத்தபிரானின் நியதி பின்வருமாறு:-ஒருவரின் ஆகாயத்தை நாலாகப் பங்கிட்டு, அதிலொரு பங்கு குடும்ப சம்ரட்சணைக்கும், இருபங்கு மேலபிவிருத்திக்காகவும், எஞ்சிய பங்கு அவசர சந்தர்ப்பங்களில் உபயோகிப்பதற்காகவும் ஒதுக்கப்படவேண்டுமென்பதே ஆனால் திரு ஜெயவர்த்தனுவின் வரவு செலவுத் திட்டம் இப்படித்தானு வகுக்கப்பட்டிருக்கிறதென்று ஆராய்ந்து பாருங்கள்.

அரசாங்கத்தை ஒரு குடும்பமாக வைத்துக்கொண்டால், அக் குடும்பத்தின் செலவுக்காக ஆகாயத்தின் நாலிலொருபங்கை மாத்திரமே ஒதுக்கவேண்டுமென்பது தெளிவாகிறது. எனினும் இங்கே திரு ஜயவர்த்தனு நாலில் மூன்று பங்கையும் அரசாங்க குடும்பங்களுக்காக- அரசாங்க நிர்வாகத்திற்காக-ஒதுக்கியிருக்கிறார்.

ஒரு குடும்பத்தின் பரிபாலனத்தில், குழந்தைகளை நோய் நொடியின்றி, ஊண் உடை கொடுத்து போஷித்து கல்வி யூட்டி வளர்ப்பதே பெற்றோர்களின் முக்கியமான-கண்டிப்பான-கடமையாகும். இதன்படி இலங்கை அரசாங்கத்தை, இத் தேச மக்களின் பெற்றோர்களாகவே கருதிக்கொள்ள வேண்டும். கவர்னரும் பிரதம மந்திரியும் தத்தம் கடமையைச் சரியானபடி செய்திருக்கிறார்களாவென்பதை அறியவேண்டும். அவர்களின் பிள்ளைகளான தேச மக்களுக்கு, அவர்கள் நடைமுறையில காட்டிவருகிற அன்பும் ஆதரவும் எப்படியென்று ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். அப்படி பார்க்கும்போது இவர்களிருவரும் நெஞ்சிரக்கமற்ற துஷ்ட பெற்றார்களாகவே காணப்படுகிறார்கள் இவர்கள் தங்கள் சுகபோக வாழ்க்கைகளுக்காக வினோதக் களியாட்டச் செலவுகளுக்காக பொதுப் பணத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் பெரிய கொகைகளைப் பார்த்தால் மேற்படி கூற்று உண்மையாய்விடுகிறது

இந்த வரவுசெலவுத் திட்டத்தில் அரசாங்க குடும்பங்களின் போஷணைக்காக எவ்வளவு லட்சக்கணக்கான பணத்தை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றால், கவர்னருக்கும் பிரதம மந்திரிக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைப் பார்த்தால் நன்றாக விளங்கும். கவர்னருக்கு சம்பள செலவுகளுக்குமாக தினசரி 1438 ரூபாயும், பிரதம மந்திரிக்கு தினசரி 420 ரூபாயும் பொதுப் பணத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சேனநாயக்காகளுக்கு கிடைத்திருக்கும் சுதந்திரத்தின்படி அவர்களுக்கு எதுவும் செய்ய முடியும். ஆனால் அவர்களின் சுதந்திரத்திற்கு எதிராக மாத்திரம் எதுவும் பேசிவிடக் கூடாது.

தற்போதுள்ள பிரிவேணைச் சட்டத்தில் இருக்கும் பல குறைகளையும் போக்க வேண்டும் என்று ஞாயிற்றுக்கிழமை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



பஸ் டிரைவருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை

பொய்ச்சாட்சியம் சொன்ன வேறொருவருக்கும் தண்டனை

கொழும்பு, டிச 11

டி. பி. மாதியஸ் எட்மன்ட் பீரிஸ என்ற வாலிபன்மீது வி ஜி. பொட்கர் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது பிரஸ்தாப வாலிபன் ஒரு பஸ் டிரைவரென்றும் திரு பொட்கர் வீட்டில் வேலைசெய்துகொண்டிருந்த ஒரு ஆயாமீது அவர் காதல்கொண்டிருந்ததே சம்பவத்திற்குக் காரணமென்றும் கூறப்பட்டது.

சம்பவத் தினத்திற்கு முதல் நாள் இரவு திரு பொட்கர் எதிரி பீரிஸை தனது கட்டிடத்தில் கண்டதாகவும், விசாரணையின்பேரில் தன்னிடம் வேலை பார்க்கும் ஒரு ஆயாவிடம் அவன் வந்துபோவது வழக்கமென்று அறிந்ததாகவும் சொல்லப்பட்டது. சம்பவ தினத்தன்று இரவு ஒரு மணிபளவில் வெளியிலே சப்தம் கேட்டு விழித்துக் கொண்ட ஸ்ரீமதி பொட்கர் தமது கணவனை எழுப்பி விஷயத்தைக் கூற அவரும் தம்பியாரும் தடிகளுடனும் டார்ச் லைட்டுகளுடனும் வெளியே சென்றார்களாம். அப்போது வெளியே இரு மனிதர்கள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதாகவும் அவர்களில் ஒருவன் பாய்ந்து கத்தியால் பொட்கரைக் கழுத்தடியில் தாக்கியதாகவும் சொல்லப்பட்டது. உதவிக்குச் சென்ற பொட்கரின் தம்பியாரும் காயமுற்றார்.

விசாரணை முடிவில் எதிரிக்கு ஐந்து வருட கடூழியச் சிறைத் தண்டனையும் பொய்ச்சாட்சியம் சொன்ன ஆயா ஜேன் நோனுவுக்கு ஒரு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

மைசூர் பருப்பை விலைகூட்டி விற்றவருக்கு அபராதம்

ரூ 4000 அபராதம் அல்லது 6 வார சிறைத்தண்டனை

கொழும்பு, டிச. 11

கே. செடியார் கடராஜன் என்பவர் மீது ஒரு அந்தர் 84 ராத்தல் மைசூர் பருப்பை திரு. பி. எல். மடிவெல என்பவருக்கு ரூபாய் 88 ஆக விற்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு ரூபாய் 4000 அல்லது 6 வாரக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இம் மைசூர் பருப்பின் கட்டுப்பாட்டு விலை ரூ. 27 சதம் 47 ஆகும்.

உணவு விலைக் கட்டுப்பாட்டு இன்ஸபெக்டர் சிவப்பிரகாசம் கட்டுப்பாட்டிலாகா சார்பிலும் எஸ். வல்லிபுரம் எதிரி சார்பிலும் ஆஜரானார்கள்.

கொலை செய்ய முயற்சித்ததாக வழக்கு

இருவருக்குச் சிறைத் தண்டனை

களுத்துறை, டிச. 11

வாதுவையைச் சேர்ந்த கலால் இன்ஸபெக்டர் ஏ. ஈ பெருமாள் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி டபிள்யூ. குணத்திலகா மீது 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாவது எதிரி ஜூலிஸ பெரேராவுக்கு 6 மாத சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

தண்டனையும் விதிக்கப்பட்டது பொய்ச் சாட்சியம் கூறிய இன்னொருவரான ஆயுர்வேத வைத்தியர் எல். சிலவாவுக்கு இரண்டு மாத கடூழியத் தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கையின் தேசியக் கொடி

(வ. மி. ஷம்சுத்தீன்)

இலங்கையின் தேசியக் கொடி எதுவாகயிருக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் இலங்கை மக்களிடையே வலுத்து வருகிறது. இலங்கை ஒரு சுதந்திர நாட்டிற்குரிய அந்தஸ்தை பெற்றதும் அதற்கு ஒரு கொடி இருக்கவேண்டியது அவசியந்தான். இலங்கைக்கு எம்மாதிரியான தேசீயக் கொடி இருக்க வேண்டுமென்பதில் பலதரப்பட்ட அபிப்பிராயம் மக்களிடையே இருந்துகொண்டிருக்கிறது. இலங்கையின் பூர்வீகக் கொடி எனச் சொல்லப்படும், தற்போதுள்ள சிங்களக் கொடியை தேசீயக் கொடியாகச் செய்துவிடலாம் எனச் சிங்களவர்களில் அநேகரும், துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணக் தமிழர்களில் ஒருசிலரும் கூறுகின்றனர். இலங்கையின் இறுதி மன்னராகிய, ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கம் ஒரு தமிழன்; தஞ்சைவாசி. ஆகவே அவர் ஆங்கிலேயரிடம் சரணடைந்த சமயம், அவரது கொடி சிங்களக் கொடியாக இருந்ததென்று இவர்கள் கூறுகின்றனர்.

அது எப்படியிருப்பினும், விஜயன் வங்காளத்திலிருந்து இலங்கையில் குடியேறிய காலமுதல், ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கம் இலங்கையை ஆண்டகாலம்வரை இலங்கை ஒரு சுதந்திர நாடாக இருந்ததில்லை. ஆகவே இப்போதுள்ள நிலைமைக்கும் அப்போதுள்ள நிலைமைக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. இன்றை இலங்கை மன்னர்களால் ஆளப்படவில்லை. மக்களால் ஆளப்படப்போகிறது. எனவே இது போழ்து இலங்கைக்கு ஒரு பொதுக் கொடி அவசியம். நமது அண்டையிலிருக்கும் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் நாட்டிற்குரிய ஒருபொதுக் கொடியை ஏற்படுத்திக்கொண்டன. அஃதேபோல் இலங்கைக்கும் ஒரு பொதுக் கொடி அவசியம். சிங்களக் கொடியை சிங்களவர்கள் வற்புறுத்துவது மற்றும் சிறுபான்மைச் சமூகத்தார்களைப் பாதிப்பதாகும். பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட சமயம், முஸ்லிம்களின் பூர்வீகக் கொடியாகிய இளம்பிறைக் கொடியை பாகிஸ்தான் கொடியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனப் பலர் கூறினர். அதை காயிதே அஃலம் முகம்மதலி ஜின்னா ஏற்றுக் கொள்ளவில்லை. சிறுபான்மையோர்களின் உரிமையை ஒப்புக் கொள்ளும் நோக்கத்துடன், அதில் ஒரு வெள்ளை நிறம் ஏற்படட்டது. அஃதேபோல் இந்துஸ்தானத்தின் கொடியிலும் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. கைராட்டின அடையாளத்தை எடுத்துவிட்டு அசோக சக்கரத்தைப் பொறித்தார்கள் ஆகவே இலங்கைக் கொடியிலும் சில மாறுதல்கள்செய்து அதை இலங்கையின் தேசீயக் கொடியாகச் செய்யவேண்டும் "பிறருயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன்" என்று மணிமேகலை கௌதம புத்தரைப்பற்றிக் கூறுகின்றது. அப்பெரியாரின் உபதேசத்தைக் கடைப்பிடிக்கும் சிங்கள நாட்டிலுள்ள சிங்கக் கொடியில் வாள் இருக்க வேண்டியதில்லை. இலங்கையில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தமிழர்களும் வாழ்கின்றனர். அவர்களுககும் கொடியில் பங்குண்டு. எனவே சிங்களக் கொடியிலுள்ள வாளை எடுத்துவிட்டு இலங்கையில் எல்லாச் சமூகத்தார்களும் புனிதமெனக் கொண்டாடும், ஆத மலையையும், அதன் அருகே ஒரு இளம் பிறையையும் பொறித்து அம் மலைக்குப் பக்கத்தில் சிங்கத்தையும் பொறித்துவிடலாம் என்பது என் கருத்து. அல்லது இதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதில் தீர்மானிக்கும் நோக்குடன் கொடியில் மாறுதல், சில நாட்களுக்கு முன் நமது பிரதம மந்திரி சேனநாயக்கா இதைப்பற்றி முடிவான தீர்மானம் பிறகு செய்யப்படுமென்று கூறினார் அவர் மந்திரி சபையிலுள்ளவர்களில் பலர், சிறுபான்மையோர்களில் முக்கியமாக இலங்கைத் தமிழர்களின் உணர்ச்சியை மதிக்காமல் சிங்களக் கொடியைத் தேசீயக் கொடியாகச் செய்துவிட அரும்பாடு படுகின்றனர். இப்படிச் செய்வதை முஸ்லிம்களும், தமிழர்களும், கிறிஸ்தவர்களும் ஒருபோதும் சகியார்கள். அப்படிச் செய்தால், இலங்கை மக்களுக்கிடையே புரடசி ஏற்படும்.

விவேக அறிவுப்போட்டி நிர். 10.

ஆசிரியரின் விடையும் பரிசு பெற்றவர் விபரமும்.

1	கா	து
2	இ	சை
3	தி	ம்
4	கா	டு
5	வி	தி
6	எ	ரி
7	த	லை
8	வா	வி
9	வ	ரி
10	வி	லை

1-ம் பரிசு (ரூ 1000) சரியான விடையனுப்பிய கீழ்க்கண்ட இருவருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூ. 500-00 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. (1) A. விஸ்வநாதன், தம்பலகமம், சைனுபே. (விசேஷ பரிசும் பெறுகிறார்) (2) S கணபதிப்பிள்ளை, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

2-ம் பரிசு (ரூ. 500) ஒரு பிழையுடன் விடையனுப்பிய கீழ்க்கண்ட 28 (பதுகு) பேருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூ. 17-86 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

(1-3) A விஸ்வநாதன். தம்பலகமம், சைனுபே. (4-11) K. சாமித்தம்பி, தும்பளை, பருத்தித்துறை. (12) M தம்பிராசா, புலோலி மேற்கு ஐ. ப. சாலை, பருத்தித்துறை. (13-14) K சிதம்பரப்பிள்ளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (15) V. சங்கரப்பிள்ளை, நறுவிலியடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை. (16-17) J. பஸ்ரியான், 22, குறுக்குத்தெரு, கண்டி. (18) C. மருதி c/o N. V. கந்தையா, குருந்துவத்தை எஸ்டேட், கம்பளை. (19) R. துரைசாமி, ரெயிலர், 11, பழையகடை பஜார், நுவரெலியா. (20-22) S பீதாம்பரக்குருக்கள் புலோலி மேற்கு, பருத்தித்துறை. (23-24) A இராசமாணிக்கம், 6, சென்ற். அந்தோனியார் தெரு, மட்டக்களப்பு. (25-28) S. கணபதிப்பிள்ளை, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

3-ம் பரிசு (ரூ. 250) இரு பிழைகளுடன் விடையனுப்பிய 227 (பங்கு) பேருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தலைக்கு ரூ 1-10 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. (3-ம் பரிசு பெற்றவர்களின் பெயர் ஜாபிதாவை எமது காரியாலயத்திற் பார்வையிடலாம்)

போனஸ் பரிசுகள்:- (1) ரூ. 100. S. பீதாம்பரக்குருக்கள், புலோலி மேற்கு, பருத்தித்துறை. (848 கூப்பன்கள் அனுப்பியவர்) (2) ரூ. 50. J. பஸ்ரியான், 22, குறுக்குத்தெரு, கண்டி. (440 கூப்பன்கள் அனுப்பியவர்) (3) ரூ. 30. K. சாமித்தம்பி, தும்பளை, பருத்தித்துறை. (404 கூப்பன்கள் அனுப்பியவர்) (4) ரூ. 20. இருவருக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1. T. S. S. இராசாம்பாள், இரும்புக்கடை தெற்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை. (144 கூப்பன்கள் அனுப்பியவர்) 2 M S A முகைதீன் பிச்சை, 143, மானிப்பாய் ரோட், முஸ்லீம் தெரு, யாழ்ப்பாணம். (144 கூப்பன்கள் அனுப்பியவர்)

ஏஜன்ஸி பரிசுகள்:- (1) ரூ 20 ஜெய லங்கா புக் டிப்போ, மார்க்கற், பருத்தித்துறை. (2) ரூ 15. C. கனகசபை, கனகம் ஸ்டோர்ஸ, தம்ப செட்டி, பருத்தித்துறை. (3) ரூ. 10. A. ஆரோக்கியசாமி, போட்டி லோலன் காரியாலயம், உடஹந்தன்னை S. P. O.

பரிசுத் தொகைகள் 16-12-47ல் அனுப்பி வைக்கப்படும்.

விவேக அறிவுப்போட்டி நிர். 11.

பொங்கற் பரிசு ரூபா 3000-00

1-ம் பரிசு	ரூபா 1750-00	1-ம் போனஸ் பரிசு	ரூபா 100-00
2-ம் ,,	,, 500-00	2-ம் ,,	,, ,, 50-00
3-ம் ,,	,, 400-00	3-ம் ,,	,, ,, 3 -00
இதர போனஸ் பரிசு	150-00	4-ம் ,,	,, ,, 20-00

முடிவு தேதி 8-1-48

மொத்தம் 14 போனஸ் பரிசுகள்!

பிரவேசக்கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம்50 ரூபா 4-00க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன் அனுப்புபவர்கள் தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப்போல் இன்னுமொரு மடங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம்.

ஒரே கவரில் அதிக கூப்பன்கள் அனுப்பியவர்களிடம், அனுப்பிய கூப்பன்தொகைகளுக்கு ஏற்ப நால்வருக்கு போனஸ பரிசு கொடுக்கப்படும். இதற்கு அடுத்தபடியாக ஒரே கவரில் அதிக கூப்பன்கள் அனுப்பிய பத்துப் பேர்களுக்கு இதர போனஸ பரிசு ரூபா 150-00 சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

சரியான விடை யாழ்ப்பாணம் எக்சேஞ் வங்கி (The Exchange Bank of India & Africa Ltd) யில் டிப்பாசிட் செயயப்படடிருக்கிறது. சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படின் குறித்த பரிசுத்தொகை சமமாகப் பகிர்ந்து வழங்கப்படும். இப்போட்டியில் ஒருவர் எத்தனை பரிசுகளும் பெற உரிமை உண்டு

விடைகளைத் தனிக் காகிதத்தில் எழுதியும் அனுப்பலாம்

1	கொ	டி
2	மா	
3		ர்
4	த	
5		லை
6	தே	
7		னி
8	மா	
9		தி
10	க	

குறிப்புகள்:

1 அழகிய மூவர்ணக் .... இந்தியாவின் சுதந்திர தினத்தை நினைவூட்டுகிறது.
2 ", ... வை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
3 இதிலே நீர் இருக்கிறது.
4 சீமேந்தினாலாகிய இது மழைகாலத்தில் ஜில்லென்றிருக்கும்
5 .... நேரத்திலே சிறிது தூரமாவது நடந்து போய் வருவது நல்லதென்கிறார்கள்.
6 வீட்டிலேயுள்ள ....யின் தன்மைக்குத்தக்கபடி செலவு கூடும் குறையும்.
7 இதை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் உடலுக்கு கேடு விளையும்.
8 சுயம்வர மண்டபத்திற்கு இதோடு வருவாள் மன்னன் மகள்.
9 .... க்கு மாருக எக்காரியத்தையும் செய்ய விரும்பார் சிலர்.
10 .... எழுதுவதற்கு ஒரு தனித்திறமையும் அனுபவமும் வேண்டும்.

சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரமும் 16-1-48 சுதந்திரனில் வெளிவரும்.

இலவசக் கூப்பன்களுக்கும் நிபந்தனைகளுக்கும் எழுதுக:-

SRI LANKA MANUFACTURING CO., LTD.,
Courts Road, Point-Pedro.

போட்டி டிப்ஸ்

விவேக அறிவுப்போட்டி நிர். 11ன் விடை விமர்சனம் வெளிவந்து விட்டது. தனிப்பிரதி சதம் 25. 50 சதம் போஸ்டல் ஓடர் அனுப்பி இரண்டு தடவைக்குரிய விமர்சனம் பெற்றுக் கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம்,
உடஹந்தன்னை. S. P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திரிகோணமலையில் காணிகள் கொடுக்கப்படுமா? கல்வி புகட்டப்படுமா?'

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மென்றும் இவைதான் இன்று தேசகதில் முக்கியமென்றும் சுகாதார அபிவிருத்திகள் பற்றியும் கூறினர்.

அரசாங்க நிர்வாகம், அரசாங்க செலவுகள், உத்தியோகஸ்தர்கள் முதலியன பற்றி விசாரணை நடத்தி தகுந்த திட்டங்களைத் தயாரிக்க வெளிநாட்டிலிருந்து ஒரு நிபுணரைத் தருவிக்க வேண்டுமென்றும் அரசாங்க செலவு குறைக்கப்பட வேண்டுமென்றும் இன்று அரசாங்கத்திலுள்ள உத்தியோகஸ்தர் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்றுமகூறினர்

மேலும் அவர் பேசியதாவது:-

இறக்குமதிப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படுகிறது அதே நேரத்தில் சில பொருள்களின் விலையேற்றத்தை குறைக்க அரசாங்கப் பணம் உதவுகின்றது இது ஏனென்று தெரியவில்லை. பொருள்கள் மீது வரி அதிகரிக்கப்பட்டதை பற்றி பொதுவாக நல்ல அபிப்பிராயம் இல்லை. தேசத்தின் உணவு உற்பத்தி அதிகரிக்க வழிவகைகளை வகுத்துக்கொள்ளவேண்டும்.

இத்துடன் மாலை 4 மணியானதால் கூட்டம் தேனீர் இடைவேளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. தேனீர் இடைவேளைக்குப் பின் அவர் தொடர்ந்து பேசுகையில வேலையில்லாப் பிரச்னை, அரசாங்க உத்தியோகஸ்தர் சம்பளம், அரசாங்க செலவு விபரங்கள் பரிசோதிக்கப்படுவது, அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிஷன் அறிக்கை, அரசாங்க இலாகாக்கள் வேலை முதலியன பற்றி கூறினர்.

தடுக்கான பேச்சுக்கு கண்டனம்

இலங்கையில் இந்தியர் வந்ததாலதான் வேலையில்லாப் பிரச்னை ஏற்பட்டதென்றும் இங்குள்ள சில சமூகத்தினரை வெளியேற்ற வேண்டுமென்றும் வாரியப்பொளை பிரதிநிதி திரு ஐவன் திஸநாயகா முன்னாள் வாதத்தின்போது கூறியிருந்தார். திரு. எஸ். தொண்டமான் இங்கு பேசுகையில் இப்பிரதிநிதியின் வாய்த்துடுக்கான கூற்றுக்குச் சரியான சாட்டை கொடுத்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"இலங்கையிலுள்ள எல்லா எஸ்டேட்டுகளையும் தேசியமயமாக்குவதால் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க முடியுமானால் இதனை நான் நிச்சயமாக ஆதரிப்பேன்.

"தேயிலை உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்கு தொழிலாளர்கள் சோம்பேறிகளென்றல்ல. எஸ்டேட் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று பல வருடங்களாக கோரப்பட்டு வரப்பட்டது. ஆனால் இது இன்னமும் செய்யப்படவில்லை எனது தொகுதியில் உள்ள மக்களுக்கு வைத்திய வசதிகள் அளிக்கப்பட வேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் டெலிபோன் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது உள்நாட்டில் அரசாங்கம் வாங்கும் நெல்லுக்கு அதிக விலை கொடுக்கப்பட வேண்டும். வெண்ணெய் பழவகை முதலியவற்றுக்கு அதிகரித்த வரியை வாபஸ்பெற வேண்டும்.

களுத்துறை பிரதிநிதி திரு. எ. ஏ. குணவர்தனா பேசுகையில் ஸ்தலஸதாபனங்கள் பற்றியும் தேசத்தின் வைத்தியசுகாதாரப் பகுதியின் குறைகளைப் பற்றியும் தேசத்தில் சாராயம் விநியோகிப்பது பற்றியும் பட்ஜெட் பற்றியும் கூறினர்.

மத்துரட்ட தொகுதி பிரதிநிதி திரு எம். டி. பண்டா பேசுகையில இறக்குமதி ஏற்றுமதி பற்றியும் சமூக சேவை பற்றியும் பொருளாதாரம் பற்றியும் விருகம், உணவு உற்பத்தி, ரஸதாக்கள் அமைப்பு, கிராமாபிவிருத்தி லஞ்சம், ஊழல் முதலியன பற்றியும் கூறினர்.

திரிகோணமலை தொகுதி பிரதிநிதி திரு. சிவபாலன் பேசியதாவது:-

போக்குவரத்து

திரிகோணமலை தொகுதி போக்குவரத்து நிலைமை மிக மோசமாக இருக்கிறது. இங்குள்ள ரஸ்தாக்கள் சேதமடைந்த நிலையில இருக்கின்றன இங்குள்ள பெரும் ரஸதாக்கள் உடனே சீர்திருத்தப்பட வேண்டும். டிஸ்டிரிக்ட் ரஸதா கமிட்டியின் கீழ்உள்ள ரஸ்தாக்கள் நிலைமை பேசவேண்டியதில்லை மராமத்து இலாகாவின் நிர்வாகத்தின் கீழுள்ள ரஸதாக்களும் டிஸ்டிரிக்ட் ரஸ்தாக் கமிட்டியின் நிர்வாகத்துக்குக் கீழ் உள்ள ரஸதாக்களும் உடனடியாக திருத்தியமைக்கப்பட வேண்டும். ரயில் போக்குவரத்து பொது மக்கள் சௌகரியத்துக்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட வேண்டும். ரயில் தரிக்கும் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் கடலில் கப்பல் மூலம் உள்ள போக்கு வரத்து வசதிகளும் திருத்தியமைக்கப்பட வேண்டும். இப்பொழுதுள்ள துறைமுகம் மிகவும் பழையது. இதனை அவசியம் திருத்தியமைக்க வேண்டும். இப்பொழுதுள்ள நீர்க்கடலைவகளை விடுவிடு அந்தந்த இடங்களில் ரஸதாக்களை இணைக்கும் பாலங்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஸதல ஸதாபனங்களின் வருமானங்கள் அதிகரிக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுக்கவேண்டும். ரஸதாக்கள் திருத்தி அமைக்கப்படுவதற்கு அரசாங்க மான்யம் அளிக்கப்படவேண்டும் போக்குவரத்து முறைகள் அவசியம் அரசாங்கத்தால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு அவர்கள் நிலவகளில தான்ய உற்பத்தி செய்து கொள்ள தகுந்த வசதிகளை அரசாங்கம் செய்துகொடுக்க வேண்டும். காணியில்லாத மக்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும். மக்கள் இருக்குமிடங்களில்தான் அதுவும் அளிக்கப்பட வேண்டுமே யொழிய தவர்களுக்கு காணிகள் கொடுப்பதற்காக குடிஜனமற்ற பகுதிகளுக்கு அனுப்பப்படாது ஒரு இடத்தில 25,000 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டது. அங்கு வேலை செய்ய போதிய மக்கள் இருக்கவில்லை இதனால் அந்த நிலம் சரியான முறையில் உபயோகப்படுத்தப் படவில்லை வேறு ஒரு இடத்தில் 120,000 பேர் இருந்தார்கள். ஆனால் அவர்கள் வேலை செய்ய காணி இல்லை. மக்களுக்கு அரசாங்க காணி விநியோகிக்கும் முறை மிகவும் அதிருப்தியைக்கொடுப்பதாகும்.

விவசாயத் துறையில் இயந்திரங்கள் அதிகம் உபயோகிக்க வேண்டும், விவசாயத்தை இயந்திர மயமாக்குவது சாலச் சிறந்தது மக்களுக்கு அரசாங்கம் காணி கொடுக்கும்போது அந்தக் காணிகளை விவசாயத்துக்கு ஏற்றதாக மாற்றிக் கொடுக்கவேண்டும். காணிகளில மக்கள் குடியேறிய பின் ஆங்காங்கு அவர்கள் நலன்களைப் பாதுகாக்க விவசாய சங்கங்கள் நிறுவப்படவேண்டும். வெளி ஆடகளால் இவ்விதம் குடியேறும் மக்கள் சுரண்டப்படுவதை இம்முறையினால் தடுக்கமுடியும்.

அரசாங்கம் உள்நாட்டில் வாங்கும் நெல்லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும். இலவசக் கல்வி என்னுடைய தொகுதி மக்களுக்குப் பயனைக் கொடுத்துள்ளது இத்திட்டத்தின் கீழ் பிற்போக்கான பகுதிகளில் உள்ள பிள்ளைகள் எதுவித பயன்களையும் அடைய முடியாது இருக்கின்றனர். பிற்போக்கான பகுதிகளில் ஆரம்பப் பாடசாலைகளோ மத்திய பாடசாலைகளோ இல்லை.

எங்கும் இலவசக் கல்வியைப் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் இங்கு திரிகோணமலையில அது கிடையாது. இப்பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களில் பெரும்பாலாக தாய்ப் பாஷைதான் போதிக்கப்படுகின்றது. இங்கு கவர்ன்மெண்ட் மத்திய பள்ளிக்கூடமும் கிடையாது ஜூனியர் பள்ளிக்கூடமும் இல்லை.

திரிகோணமலையின் கல்வி நிலைமை சீர்திருத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மாணவர்களுக்கு ஸ்கொலர்ஷிப் கொடுக்கப்படல் வேண்டும். அரசினர் மத்திய கலாசாலை ஒன்று ஏற்படுத்த வேண்டும். ஜூனியர் கலலூரி ஏற்படுத்த வேண்டும் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

திரிகோணமலையில் ஒரு சிங்களப் பள்ளிக்கூடம் உண்டு. அதில் 359 பிள்ளைகள் படிக்கிறார்கள். அதன் விஸதீரணமோ 1000 சதுர அடியாகும்.

இங்கு 100 பிள்ளைகள்தான் வசதியாகபடிக்கமுடியும். கூரையோ மழை காலததில் ஒழுகுகின்றது.

என்னுடைய தொகுதியிலுள்ள கிராமமக்கள் வாழ்க்கை நிலை மிக மோசமாக இருக்கிறது. மக்கள் வசிப்பதற்கு அருகதை பற்ற இடங்களில் இன்று அவர்கள் வசிக்கின்றனர். இந்த நிலைகளிலிருந்து அவர்களைப் பாதுகாகப்படவேண்டும்.

கூட்டுறவு இயக்க வேலைகள் இத்தொகுயில ஊக்கமாகத் நிறப்பட நடத்தப்பட வேண்டும் உணவைப் பொறுத்தமட்டில் இலங்கை சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக்கவேண்டும்.

திரிகோணமலையிலுள்ள எல்லா வீடுகளிலும் வேலை இல்லாது இருப்பவர்கள் இருக்கின்றனர் அவர்களைப்பற்றிய புள்ளிவிபரங்களை அரசாங்கம்எடுத்து ஆவனசெய்யவேண்டும் இத்தொகுதிக்கு அதிக வைத்திய வசதிகள் அளிக்கப்படவேண்டும். இப் பகுதிக்கு திறமையுள்ள டாக்டர்கள் அனுப்பப்படவேண்டும். திரிகோணமலை தொகுதியிலுள்ள மக்களுக்கு ஒரு சிறந்த வீடமைப்புத் திட்டதை அரசாங்கம் தயாரிக்க வேண்டும்.

காணிகளை விவசாயிகளுக்கு ஒதுக்கும்போது விவசாயிகளுடைய விண்ணப்பங்களை சரியான முறையில் உடனுக்குடன் மந்திரி கவனித்துகொள்ளவேண்டும். காணிகமிஷனர் இலாகாவுக்கு இது சம்பந்தமாக நான் அனுப்பிய ஜாபிதா ஒன்று கவனிகக்படுவதில் தாமதம் ஏற்பட்டதுடன் ஏமாற்றமடையவும் வேண்டி வந்தது.

"காணிகள் இங்கு திருத்தப்படுவதே இல்லை. அங்குள்ள மக்களுக்கு விவசாய உதவிகள் செய்ய அரசாங்கம் முன்வருவதாகக் காணப்படவில்லை. காணி வேண்டுமென்று அரசாங்கத்தை அங்குள்ள மக்கள் கேட்டால் செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றுதான் இருக்கின்றது.

மக்களுக்கு இன்று காணிப் பசி எடுத்துவிட்டது அரசாங்கம் இன்னும் தாமதியாமல் காணிகள் கொடுக்குமா?"

வெண்ணெய், நெய் முதலியவற்றின் மீது விதிக்கப்பட்ட வரி வாபஸ் பெறப்பட வேண்டும். இவற்றினால் ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் மீன்பிடித் தொழில், உப்பு உற்பத்தி தொழில் முதலியன சீர்திருத்தப்பட வேண்டும்.

திரு. காரியப்பர் இடதுசாரிகளைத் தாக்கிப் பேசினார். சபை முதல்வர் அவரை விவாதம் நடத்தப்படும் விஷயத்திற்கு வரும்படி கூறினர். அதன் மேல் அவர் போலிஸ படை நிலைமை, தேச பொருளாதாரம், கல்லோயா திட்டம் முதலியனபற்றி பேசினர்.

திரு டி. பி. சுபசிங்கா பேசுகையில் தேச பொருளாதாரம், மக்கள் வாழ்க்கை முதலியன பற்றி கூறினர். இத்துடன் இரவு எட்டு மணியாதலால் சபை நடவடிக்கை இரவு போஜன இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது. இடைவேளைக்குப்பின் திரு. சுபசிங்கா தொடந்து பேசுகையில் வெண்ணெய், பழவகைகள் முதலியவற்றின் அதிகரிக்கப்பட்ட வரி பற்றியும் தேங்காய் திருவல் ஆலைக்காரர்கள் அதிக லாபம் எடுத்துள்ளனர் என்றும் அவர்கள் மீது வரி விதிக்கப்பட வேண்டுமென்றும் கிராமாபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி முதலியனபற்றியும் கூறினர். வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே அதிலுள்ள விஷயங்கள் வெளிவந்திருந்தனவென்று இவைபற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் இதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

கலவிவா தொகுதி பிரதிநிதி பேசுகையில் தம்முடைய தொகுதியின் விவசாய அபிவிருத்தி பற்றி குறிப்பிட்டார். திரு. டபிள்யூ. வி. ஏ. விக்கிரமசிங்கா பேசுகையில் தமது தொகுதியின் குறைகள்பற்றியும் அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்பற்றியும் ரஸ்தாக்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் உள்நாட்டு உணவுப் பொருள் கொள்வனவுபற்றியும் கூட்டுறவு இயக்கம் பற்றியும் கூறினர், இரவு 10 மணியானதால் மேற்கொண்டு சபை நடவடிக்கை இன்று பிற்பகல் 1 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜப்பானிய மன்னரை வணங்குவது

தொடர்ந்து நடைபெறுகிறது

லண்டன், டிச 9

"ஜப்பானிலே மன்னர் தான் கடவுள் என வணங்குவதைத் திருப்பிப் புகுத்த ஒரு சாரார் எத்தனிப்பதை அறிவாரோ என்றும் அப்படியானால் அதைக் தடுக்க நடவடிக்கைகள் எடுப்பாரா" என்று தொழிற்கட்சி அங்கத்தவரான திரு ஷெவிங்டன் லொட்ஜ் நாளை கூடும் பாராளுமன்றக் கூட்டத்தில் பிரதமர் அட்லியைக் கேட்பாரென அறியப்படுகிறது.

சில நாட்களுக்குமுன் ஜப்பானிய மன்னர் ஹிரோ டடோ அணுக் குண்டினால் அழிக்கப்பட்ட ஹிரோஷிமாப் பிரதேசதைப் பார்வையிடப் போகும் வழியில் 5 லட்சம் ஜனங்களுக்கு மேல் கூடி ஆவேசத்தோடு வரவேற்றார்கள் என பிரிட்டிஷ் பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

பெல்ஜிய மன்னர் திரும்புகைக்கு எதிர்ப்பு

பிரஸெல்ஸ், டிச. 9

பெல்ஜிய பாராளுமன்றத்தில் மன்னர் திரும்பி வருவதை பற்றிய விவாதத்தில் பிரதம மந்திரி திரு ஸ்பாக் கை ஸோஷலிஸ்ட் கட்சித் தலைவரான திரு மக்ஸ புசற் எதிர்ப்பாரென உத்தியோக தோரணையில் இன்று அறிவிக்கப்பட்டது.

இவ்விவாதத்தின் முடிவில் திரு ஸ்பாக் இப்போதுள்ள மந்திரி சபையில் பாராளுமன்றத்தாருடைய நம்பிக்கையை தெரிவிக்கும்படி கேட்டுப் பாதமாத் தீர்ப்பளிக்கப்பட்டால் அவர் ராஜிநாமாச் செய்வாரென அறியப்படுகிறது. அப்படியானால் பாராளுமன்றம் குலைக்கப்பட்டு அடுத்த 40 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தவேண்டியது சட்டம்.

லியப்போல்ட் மன்னர் தேசப் பிரஷ்டஞ் செய்யப்பட்டு இப்போ சுவிட்சர்லந்தில் இருக்கிறார். சில நாட்களுக்கு முன் சிலர் அவரிடம் போய் திரும்பி முடியை யேற்கும்படி கேட்டதற்கு தான் ஜேர்மன் படையெடுப்புக் காலங்களிலும் அதற்குப் பின்னரும் நடந்து கொண்டது சரியென்பதை பெல்ஜிய மக்கள் ஏற்றுக் கொண்டால் திரும்ப அரச பதவியை யேற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்.

சர்ச்சிலின் உல்லாசப் பிரயாணம்

லண்டன், டிச, 10

மொரோக்கோவிலுள்ள மறக்கீஸ எனனுமிடத்தில் தனது கிறிஸ்மஸ் விடுமுறைநாட்களைக் கழிக்கச் செல்லும் வழியில் பிரிடிஷ் எதிர்க்கட்சித் தலைவரும் சென்ற யுத்த காலத்தில் பிரதம மந்திரியுமாயிருந்த திரு. வின்ஸ்டன் சர்ச்சில் பாரிஸ் நகரில் தங்கிப்போக விமான மார்க்கமாக இன்று காலை பயணமானார். (ராய்ட்டர்)

ஒரு கோடி ரூபாய் ஆஸ்தியுள்ள மடம்

திருப்பதி மஹந்து நியமனம்

திருப்பதி, டிச. 7

திருப்பதியிலுள்ள ஸ்ரீ ஸ்வாமி ஹதிராம்ஜி மடத்தின் காலஞ் சென்ற தலைவர் மஹந்து ஸ்ரீ பிரயாக் தாஸ்ஜியின் பிரதம சிஷ்யரான ஸ்ரீ நாராயண தாஸ்ஜி மதராஸ் ஹிந்து மத ஸ்தாபன போர்டாரால் மேற்படி மடத்தின் மஹந்தாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். மடத்தின் சொத்துக்கள் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ளதெனக் கூறப்படுகிறது.

இரட்டை வரி இல்லை

பாகிஸ்தான் இந்திய ஒப்பந்தம்

கராச்சி, டிச. 10

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் வெளியிட்டுள்ள ஒரு விசேஷ உத்தரவுப்படி வருமானவரி சட்டம், அமிதலாப வரிச் சட்டம், வியாபார வரி முதலிய சட்டங்கள் மாற்றியமைக்கப்படும்.

இதே மாதிரி உத்தரவை இந்திய சர்க்காரும் பிறப்பிப்பார்கள் இதன் நோக்கம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள வருமானங்களுக்கு இரண்டு இடங்களில் தீர்வை போடக்கூடாது இரு இடங்களிலும் வருமானம் ஒரு கம்பெனி அல்லது நபருக்கு வந்தால், அதற்கு எப்படி வரி விதிப்பது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

இது பாகிஸ்தான் இந்திய சர்க்கார் தீர்வைபற்றிய ஒப்பந்தமாகும்.

கடலுட் பாய்ந்த வீரர் கரைசேர்க்கப்பட்டனர்

சிங்கப்பூர், டிச 10

இந்தோ சீனத்தில் சண்டை செய்யும் படைகளை யேற்றிச் சென்ற மறேஷால் ஜோபர் என்னும் யுத்தக் கப்பலிலிருந்து 6 நாடகளுக்கு முன்னர் மலாக காத்தொடுவாயில் கடலுக்குட் குதித்த 10 அந்நிய தேச வீரர்கள் இன்று வேறோர் படகிலுள்ளவர்களால் மீட்கப்பட்டு மலேயாக்கரையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் இருவர் சுவிட்ஜர்லந்து தேசத்தவர், ஒருவர் ஜேர்மனியர் ஒருவர் ஹாலந்து தேசத்தவர் ஏனையோர் இத்தாலி தேசத்தவராகும்.

இவர்களனைவரையும் சட்ட விரோதமாகக் கரைக்குவந்தவர்களெனப் போலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

[ராய்ட்டர்]

உங்கள் நோய் எதுவானாலும் சரி

உத்தரவாதமாக தீர்த்துதருகிறேன்.

வாழ்க்கையைப் பாழ்படுத்தும் கொடூரமான தொற்று வியாதி உள்ளவர்கள் தங்களுக்குப் பின்னால் நோயும் கஷ்டமும் அனுபவிக்கும் சந்தானத்தைத் தவிர வேறொன்றையும் நிலைக்கச் செய்வதில்லை. எனவே உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை அகற்றி சுகத்துடன் வாழ என்னுடன் கலந்து ஆலோசியுங்கள்.

அஸமா, காசம், க்ஷயம், மூலம், வாதம், குஷ்டம் என்றும் தீராத நோய் எதுவானாலும்சரி உத்தரவாதமாய் தீர்த்துதருகிறேன். நோய்எதுவானாலும் பொருத்தம் பேசியும் தீர்த்து கொடுக்கப்படும் நான் எனது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோட் யாழ்ப்பாணம். இம்மாதம் 20-ம் திகதிவரை தங்கி இருப்பேன்.

Ayur Dr. V. K. S, செல்லப்பாபிள்ளை M. A. M. S. (கல்கத்தா)

சிவானந்த சித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ்: 92 செட்டியார் தெரு, கொழும்பு.

பிராஞ்சு ஆபீஸ்கள்:

768 லோவர் வீதி, பதுளை.

23/7 ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வ. கந்தையா, C. G. R. கம்பளை சொல்வதாவது:

சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணினும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாது, கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து, சிர நேத்திராஞ்சன தைலத்தை எடுப்பித்து பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணசுகத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வகுணத்தின் திறமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள இயலாது பேப்பர் மூலமாக இதை யாவற்றும் பிரசித்தப் படுத்துகிறேன். ஒப்பம்

வ. கந்தையா C. G. R. கம்பளை.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும், காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.



விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

கிங்ஸ்லியில்

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ். சுபராஜன், எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் இங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org